
# கர்ப்பத்தடை ஊசி (DMPA) பாவனை பற்றிய சேவை வழங்குனர்களுக்கான வழிகாட்டி



| | | |
|---|---|---|
| **5.4.** | **பிரசவத்தின் பின் தாய்ப்பாலூட்டாத தாய்மார் (குழந்தை உயிருடனிருப்பினும் பிறந்து 31 நாட்களுக்குள் இறந்திருப்பின் அல்லது இறந்து பிறந்திருப்பின்.)** | • பிரசவித்து முதல் 6 கிழமைகளுக்குள் முதலாவது DMPA ஊசி எந்தவொரு நாளிலும் வழங்கப்படலாம். எனினும் இவ்வாறு 6 கிழமைகளுக்குள் வழங்குவதனால் பிரசவத்தின் பின்பான குருதிப்போக்கு அதிரிக்கக் கூடும்.<br>• பிரசவித்து 6 கிழமைகளின் பின்னர் பெண் கர்ப்பம் தரித்திருக்கவில்லையென உறுதிப்படுத்திய பின்னர் எந்த ஒரு நாளிலும் DMPA ஊசி வழங்கப்பட முடியும். (இணைப்பை பார்க்கவும்) அத்துடன் அடுத்து வரும் 7 நாட்களுக்கு உடலுறைவைத் தவிர்க்குமாறு அல்லது மேலதிகமாக வேறோர் கர்ப்பத்தடை முறையை பின்பற்றுமாறு (ஆணுறை) அறிவுறுத்தவும். |
| **5.5** | **கர்ப்பம் தரித்து 28 கிழமைகளுக்குள் கருச்சிதைவுக்குட்பட்ட பெண்கள்.** | • கருச்சிதைவின் பின் முதல் 7 நாட்களுக்குள் முதலாவது DMPA ஊசி வழங்கப்படலாம்.<br>• 7 நாட்களின் பின்னர் தொடங்குவதாயின் 5.1 மற்றும் 5.2 இல் வழங்கப்பட்ட அறிவுரையை பின்பற்றவும். |
| **5.6** | **ஓமோன் அடங்கிய வேறோர் கர்ப்பத்தடை முறையிலிருந்து மாறி DMPA ஊசியைப் பெற விரும்பின்.** | |
| | 5.6.1. கர்ப்பத்தடை மாத்திரைகள் பாவித்து DMPA பெற இருப்பவர். | • கர்ப்பத்தடை மாத்திரைகள் சரிவர ஒழுங்காக எடுத்திருப்பின் மாத்திரைகளை நிறுத்தும் அதே நாளில் DMPA ஊசியை வழங்கலாம். மேலதிகமான குடும்பத்திட்ட முறையேதும் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை.<br>• கர்ப்பத்தடை மாத்திரைகளை சரிவர ஒழுங்காக எடுத்திருக்காவிடின் அவர் கர்ப்பம் தரித்திருக்கவில்லையென உறுதி செய்த பின் DMPA ஊசி வழங்கலாம். (இணைப்பை பார்க்கவும்).அத்துடன் அடுத்து வரும் 7 நாட்களுக்கு உடலுறைவைத் தவிர்க்குமாறு அல்லது மேலதிகமாக வேறோர் கர்ப்பத்தடை முறையை பின் பற்றுமாறு (ஆணுறை) அறிவுறுத்தவும். |
| | 5.6.2. தோலின் கீழ் பதிக்கப்படும் ஓமோன் முறையைப் பாவித்து DMPA பெற இருப்பவர். | • தோலின் கீழ் பதிக்கப்பட்ட ஓமோன் செலுத்தியை அகற்றும் அதே நாளில் DMPA ஊசி வழங்க முடியும். மேலதிகமாக வேறு குடும்பத்திட்ட முறையெதையும் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. |
| **5.7** | **கர்ப்பப்பை உட்கருள் பாவித்த பின் DMPA பெற இருப்பவர்** | |
| | 5.7.1.மாதவிடாய் சக்கரத்தில் முதல் 7 நாட்களுக்குள் | • DMPA ஊசியை வழங்கும் அதே நாளில் கர்ப்பப்பை உட்சுருளை அகற்ற முடியும் மேலதிகமாக வேறு குடும்பத்திட்ட முறையெதையும் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. |
| | 5.7.2. மாதவிடாய் சக்கரத்தில் 7 நாட்களின் பின் | • எந்த ஒரு நாளிலும் DMPA ஊசியை வழங்க முடியும். ஆனால் கர்ப்பப்பை உட்சுருள் அடுத்துவரும் மாதவிடாய் நாட்களில் அகற்றப்படுவது சிறந்தது. எனினும் DMPA வழங்கும் அதே நாளில் உட்சுருளை அகற்றினால் அத்துடன் அடுத்து வரும் 7 நாட்களுக்கு உடலுறைவைத் தவிர்க்குமாறு அல்லது மேலதிகமாக வேறோர் கர்ப்பத்தடை முறையை பின் பற்றுமாறு (ஆணுறை) அறிவுறுத்தவும். |

| | | |
|---|---|---|
| 5.8 | **ஓமோன்கள் அற்ற குடும்பத்திட்ட முறையொன்றைப் பயன்படுத்தியவர் (இயற்கையான முறைகள், ஆணுறை) DMPA ஊசிக்கு மாற இருப்பின்.** | • பகுதி 5.1 ஐ பார்க்கவும். |

## 6. DMPA ஊசியை வழங்கும் முறை.

### 6.1. தேவையான பொருட்கள்.



i. DMPA ஊசி மருந்து ஒரு குப்பி (150 மில்லிகிராம்/ மில்லிலீற்றர்)

ii. தொற்று நீக்கிய பஞ்சு

iii. தொற்று நீக்கப்பட்ட 1-3 மி.லீ அளவுடைய ஊசி மருந்து செலுத்தியுடன் 22G(0.7x32 மி.மீ) அல்லது 21G(0.8 x 40 மி.மீ) தொற்றுநீக்கப்பட்ட ஊசி.

### 6.2 ஊசிமருந்து ஏற்றும் போது பின்பற்ற வேண்டிய படிமுறைகள்.

i. சவர்க்காரத்தையும் நீரையும் பாவித்து கைகளிரண்டையும் நன்கு கழுவவும்.

ii. ஊசி ஏற்றப்பட வேண்டிய பகுதி அழுக்காக இருப்பின் அவ்விடத்தை சவர்க்காரத்தையும் நீரையும் பாவித்து கழுவவும். ஊசி ஏற்றப்பட வேண்டிய பகுதியை (மேற்புயத்தின் வெளிப் பக்கத் தசைப்பகுதி) தொற்று நீக்கப்பட்ட உலர்ந்த பஞ்சினால் துடைக்கவும். துடைக்கும் போது ஊசி ஏற்றப்படும் இடத்தை மையமாகக் கொண்டு ஆரம்பித்து வட்டமாக வெளிப்புறத்தை அடையும் வகையில் துடைக்கவும்.

iii. மருந்துக் குப்பியிலுள்ள காலாவதியாகும் திகதியை அவதானித்துச் சரிபார்க்கவும்.

iv. குப்பியை நன்றாகக் குலுக்கி மருந்தைக் கலக்கவும்.

v. குப்பியின் மேற்புறத்தை தொற்று நீக்கிய ஊசியால் துளைத்து அதிலுள்ள மருந்து முழுவதையும் (1மி.லீ) செலுத்தியினுள் இழுத்து எடுக்கவும். DMPA சிறிதளவேனும் குப்பியினுள் எஞ்சியிருக்கவில்லையென உறுதிப்படுத்திக் கொள்ளவும். ஒவ்வொரு முறை ஊசி ஏற்றும் போதும் ஓர் புதிய தொற்று நீக்கப்பட்ட ஊசியும் செலுத்தியும் பயன்படுத்தப்பட வேண்டும்.

vi. மேற்புய வெளிப்புறத் தசையின் மேல் உள்ள தோலை படத்தின் காட்டியவாறு பிடித்தபடி, மேற்பரப்புக்கு 90 பாகை செங்குத்தாக ஊசியை ஆழமாகத் தசையினுள் செலுத்தி, செலுத்தியிலிருக்கும் DMPA முழுவதையும் உட்செலுத்திய பின்னர் ஊசியை வெளியே எடுக்கவும்.

vii. ஊசி ஏற்றப்பட்ட இடத்தை அழுத்தவோ, தேய்க்கவோ கூடாது. ஊசியைப் பெற்றுக் கொண்டவருக்கும் அவ்விடத்தைத் தேய்க்கக் கூடாதெனவும் அவ்வாறு தேய்ப்பதனால் DMPA மிக விரைவில் உறிஞ்சப்பட்டு வீரியம் குறைந்து விடலாம் என விளக்கவும்.

viii. பாவித்த ஊசியும், செலுத்தியும் கூர்மையான கழிவுகள் போடும் கொள்கலனில் இடப்பட்டு அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

## 7. அடுத்த DMPA ஊசி எப்போது வழங்கப்பட வேண்டும்?

- முதலாவது ஊசி ஏற்றப்பட்டு 90 நாட்களின் பின்னர் அடுத்த ஊசி ஏற்றப்பட வேண்டும். எனினும் 90 ஆம் நாளிலிருந்து 14 நாட்கள் முன்பாக அல்லது 90ம் நாளின் பின் 28 நாட்கள் வரை வழங்கப்பட முடியும். இதன் போது மேலதிகமான குடும்பத்திட்ட முறையொன்றைப் பயன்படுத்தத் தேவையில்லை.
- 90 ஆம் நாளிலிருந்து 28 நாட்கள் கடந்த நிலையில் வரும் பெண்கள் கர்ப்பம் தரித்திருக்கவில்லையென உறுதி செய்ய முடியுமாயின் (இணைப்பைப் பார்க்கவும்) DMPA வழங்க முடியும். அத்துடன் அடுத்து வரும் 7 நாட்களுக்கு உடலுறைவைத் தவிர்க்குமாறு அல்லது மேலதிகமாக வேறோர் கர்ப்பத்தடை முறையை பின்பற்றுமாறு (ஆணுறை) அறிவுறுத்தவும்.

## 8. DMPA ஊசியை நீண்ட காலத்திற்குப் பாவிக்க முடியுமா?

- DMPA பாவிப்பதற்கு முரணான அறிகுறிகள் ஏதுமில்லாத பெண்கள் அதனைத் தொடர்ச்சியாக மாதவிடாய் நிற்கும் வரை பாவிக்க முடியும்.
- எனினும் DMPA உபயோகிக்கும் பெண்கள் மருத்துவ உத்தியோகத்தரால் வருடாந்தம் பரிசோதனைக்குட்படுவதற்காக அனுப்பப்பட வேண்டும்.

## 9. DMPA ஊசியை நிறுத்தி எவ்வளவு காலத்தின் பின் மீண்டும் கருத்தரிக்க முடியும்?

- DMPA ஊசியை நிறுத்திய பின்னர் கருத்தரிப்பதற்கு எடுக்கும் காலம் ஆளுக்காள் வேறுபடும்.
- பொதுவாக கடைசியாக ஏற்றப்பட்ட DMPA ஊசியின் செயற்பாடு முடிவடைந்து 7 மாதங்களின் பின்னர் மீண்டும் கருத்தரிக்கும் நிலையை அடைவார். (அதாவது கடைசி DMPA ஊசி வழங்கிய திகதியிலிருந்து 10 மாதங்களின் பின்னர்).

## 10. DMPA ஊசியைப் பெறுவதனால் கிடைக்கும் மேலதிக நன்மைகள்.

i. கர்ப்பப்பை உட்சுவரில் ஏற்படும் புற்றுநோயிலிருந்து பாதுகாக்கிறது.

ii. கர்ப்பப்பையில் உண்டாகும் தசைநார்க் கட்டிகளிலிருந்து பாதுகாப்பு.

மேலும் இடுப்புக்குழி அழற்சியினால் (P.I.D) ஏற்படும் தாக்கங்கள்.இரும்புச்சத்துக் குறைபாட்டால் ஏற்படும் குருதிச் சோகை என்பவற்றிலிருந்தும் பாதுகாக்கக் கூடும். அத்துடன் ''என்டோமெற்றியோசிஸ்'' நோயின் அறிகுறிகளைக் (அடிவயிற்றுவலி, ஒழுங்கற்ற மாதவிடாய்) குறைக்கும்.

## 11. பக்கவிளைவுகள்.

i. ஒழுங்கற்ற மாதவிடாய்ச் சக்கரம்.

- இரத்தச் சொட்டுக்கறை படுதல்: இரண்டு மாதவிடாய்களுக்கிடை யே சிறிதளவு இரத்தப்போக்கு இடையிடை ஏற்படுதல். இது முதல் 3-6 மாதங்கள் வரையான காலத்தில் காணப்படும்.
- மாதவிடாய் தோன்றாமை: பெரும்பாலான DMPA உபயோகிக்கும் பெண்களில் சிறிது காலத்தின் பின் மாதவிடாய் ஏற்படாமல் போகலாம்.
- அதிகளவு இரத்தப் போக்கு: DMPA உபயோகிக்கும் சில பெண்களில் மாதவிடாயின் போது அதிகளவு இரத்தப் போக்கு ஏற்படலாம். ஆனால், ஊசி பெறத் தொடங்கி சிறிது காலத்திற்கு சாதாரண அளவில் காணப்பட்ட குருதிப் போக்கு பின்னர் அதிகரித்தால் அல்லது குறிப்பிட்ட காலம் மாதவிடாய் ஏற்படாமலிருந்து, பின்னர் அதிகளவு இரத்தப் போக்கு ஏற்படுமாயின் அதற்குரிய ஏனைய காரணங்கள் உண்டா என பரிசோதித்து அறிய வேண்டும்.



ii. அதிக பசியேற்படுவதால் ஏற்படும் உடல்நிறை அதிகரிப்பு.

### 11.1 பக்கவிளைவுகளைக் கட்டுப்படுத்துதல்.

பெண்ணிடம் கேட்டறிந்த சரிதை மற்றும் பரிசோதனைகளின் மூலம் ஒழுங்கற்ற மாதவிடாய்க்கான ஏனைய காரணிகளேதும் இல்லையென உறுதிப்படுத்திய பின்.

**இரத்தச் சொட்டுக்கறை படுதல் அல்லது சிறிதளவு இரத்தப்போக்கு**

i. அறிவுரை வழங்கி மனத்திடமளித்தல்.

ii. இரும்புச்சத்துள்ள உணவு வகைகளை உண்ணுமாறு அறிவுறுத்துதல்.

iii. இரும்புச்சத்து, போலிக்கமிலம் மற்றும் விற்றமின் C மாத்திரைகளை வழங்குதல்.

iv. இரத்தச்சொட்டுக் கறைபடல் தொடர்ந்து காணப்படின் மருத்தவ உத்தியோகத்தரிடம் அனுப்பவும்.

**மாதவிடாயின் போது அதிகளவு குருதிப்போக்கு (8 நாட்களுக்கு அதிகமாக குருதிப்போக்கு அல்லது சாதாரணமாக ஏற்படுவதை விட இருமடங்கு நாட்களுக்கு இரத்தப் போக்குக் காணப்படல்). மேலதிக சிகிச்சைக்காக மருத்துவ உத்தியோகத்தரிடம் அனுப்பவும். (கீழ் குறிப்பிட்டுள்ளவற்றைப் பார்க்கவும்)**

i. 5-7 நாட்களுக்கு ஸ்ரிரொயிட் அற்ற அழற்சியைக் குறைக்கும் மருந்துகளை வழங்கவும். (மெபினமிக் அமிலம் - Mefenamic acid 500 மி.கி சாப்பாட்டின் பின்னர் ஒரு நாளைக்கு இரு தடவைப்படி 5 நாட்கள்.)

ii. குறைந்தளவில் ஓமோன்களைக் கொண்ட கர்ப்பத்தடை மாத்திரைகளை 1-2 மாதவிடாய் சக்கரங்களுக்கு வழங்கவும். (எதினைல் ஈஸ்ராடையோல் 0.03மி.கி லேவோநொஜெஸ்ரரோல் 0.15மி.கி உள்ளடங்கிய மாத்திரை)

iii. ஒரு மாதத்திற்கு மேலாக குருதிப்போக்கு தொடர்ந்து காணப்படின் மேலதிக சிகிச்சைக்காக விசேட மகப்பேறு மற்றும் பெண்ணோயில் நிபுணரிடம் அனுப்ப வேண்டும் அல்லது DMPA ஊசியை நிறுத்தி வேறோர் கர்ப்பத்தடை முறையை வழங்கவும்.

## 12. DMPA ஊசியைப் பெற முற்றிலும் தகுதியற்ற நிலைமைகள்.

| | |
|---|---|
| **கர்ப்பம் தரித்திருக்கும் போதும், பிரசவத்தின் பின்பும்** | • கர்ப்பம் தரித்திருப்பின் அல்லது கர்ப்பம் தரித்திருக்கலாம் என்ற சந்தேகமிருப்பின் .<br>• பிரசவத்தின் பின் 6 கிழமைகள் வரை. |
| **இதயம் மற்றும் குருதிச் சுற்றோட்டம் சம்பந்தமான நோய்கள்.**<br> | • இருதய நோய் ஏற்படுவதற்கான ஆபத்துக் காரணிகளில் ஒன்றுக்கு மேற்பட்டவை காணப்படல்.(உ+ம்: 35 வயதிற்கு மேற்பட்ட பெண் புகைத்தல், சலரோகம், உயர்குருதியமுக்கம்)<br>• குருதியமுக்கம் 160/100 க்கு அதிகமாக விருப்பின்<br>• பாரிசவாத நோய் ஏற்பட்டிருப்பின்<br>• மாரடைப்பு நோய் தற்சமயம் காணப்படின் அல்லது முன்பு ஏற்பட்டிருப்பின்.<br>• குருதிக் குழாய்களின் குருதி உறைந்து கட்டிபடும் நிலைமை காணப்படின். |
| **சலரோகம்** | • சலரோகத்தினால் பல்வேறு உறுப்புகள் பாதிக்கப்பட்டவர்கள் (விழித்திரை நோய், நரம்புத் தொகுதி நோய்கள், சிறுநீரக நோய் )<br>• 20 வருடங்களுக்கு மேலாக சலரோகம் காணப்படல். |
| **ஈரல் நோய்கள்**<br><br>**மார்பகப் புற்று நோய்** | • ஈரல் நார்த்தன்மையடைதல்(சிரோசிஸ்)<br>• ஈரலில் ஏற்படும் புற்றுநோய் மற்றும் ஏனைய கட்டிகள்.<br>• தற்போது மார்பகப் புற்றுநோய் காணப்படல் அல்லது முன்பு மார்பகப் புற்று நோய் ஏற்பட்டிருத்தல். |
| **யோனிவழிக் குருதிப்போக்கு** | • காரணம் அறிய முடியாத அசாதாரணமான குருதிப் போக்கு |

மேலதிக தகவல்களுக்கு, இலங்கைப் பெண்களுக்கு ஏற்றபடி மாற்றியமைக்கப்பட்ட கர்ப்பத்தடை முறைகளைப் பாவிப்பதற்குரிய மருத்துவ தகுதிகளை ஒரே பார்வையில் காட்டும் உலக சுகாதார தாபனத்தினால் 2009 ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்ட சக்கரத்தைப் பார்க்கவும்.

**விசேட நிபந்தனைகள்:**
குழந்தைகளற்ற, உடலுறவில் ஈடுபடும் பெண்களுக்கு தகுந்த அறிவுரைகளை வழங்கிய பின்னர் (கர்ப்பம் தரிக்கும் நிலைமைக்கு மீண்டும் வருவது தாமதிக்கலாம் என்பது உட்பட) DMPA ஊசியை வழங்க முடியும்.

## 13. DMPA ஊசியை வழங்குவது சம்பந்தமாக சேவை வழங்குனர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை

- DMPA ஐப் பெற இருக்கும் பெண்ணுக்கும் அவரது துணைவருக்கும் குடும்பத்திட்டம் சம்பந்தமான சிறு மின்னல் விளக்க அட்டைகளை உபயோகித்து முடிந்தளவு அறிவுறுத்த வேண்டும். சிறந்த முறையில் அறிவுறுத்துவதனால், இம்முறையை இடையில் நிறுத்துபவர்களைக் குறைக்க முடியும்.
- DMPA பெற இருக்கும் பெண்ணுடனும், துணைவருடனும் சேவை வழங்குனா் சிநேகமாகவும், நாகரிகமாகவும் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் குடும்பத்திட்டம் சம்பந்தமான தமது சந்தேகங்களை தயக்கமின்றிக் கேட்டு நிவர்த்தி செய்யும் வகையான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.
- DMPA பெறுவதால் ஏற்படும் நன்மைகள் மற்றும் பக்க விளைவுகள் (ஒழுங்கற்ற மாதவிடாய்)அடுத்த DMPA ஐ பெறுவதற்கு வரவேண்டிய திகதி போன்ற தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.
- DMPA ஐப் பெறுபவரின் தகவல்கள் யாவும் இரகசியமாகப் பேணப்பட வேண்டும். DMPA சம்பந்தமான போதுமான தகவல்களை பெண் / துணைவருக்கு வழங்கிய பின்னர் அவர்கள் சுயமாகச் சிந்தித்து DMPA ஐ பெறுவது பற்றிய முடிவை எடுப்பதற்கு சுதந்திரமளிக்க வேண்டும்.
- DMPA ஊசி வழங்குவதற்கு முன்னர் சேவை வழங்குனர்(குடும்ப சுகாதார உத்தியோகத்தர்) கீழே தரப்பட்டுள்ள DMPA பெறுவதற்குரிய தகுதிகாண் பட்டியலை சரிபார்த்து ஊசியைப் பெற இருப்பவர் அதற்கு தகுதியுடையவரா என மதிப்பிட வேண்டும்.

**DMPA வழங்குவதற்குரிய தகுதிகாண் பட்டியல்.**

| | நீங்கள் | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| 1 | கர்ப்பமாக இருப்பதாக நினைக்கிறீர்களா? | | |
| 2 | 6 கிழமைகளுக்குக் குறைந்த சிசுவிற்கு தாய்ப்பாலூட்டுகிறீர்களா? | | |
| 3 | உயர்குருதி அமுக்கம் உடையவரா? | | |
| 4 | பாரிசவாதம், இருதய நோய், குருதிக் குழாய்கள் இரத்தம் உறைந்து கட்டிபடல் போன்ற நோய்களால் முன்பு / தற்போது பாதிக்கப்பட்டிருக்கீறீர்களா? | | |
| 5 | சலரோகத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறீர்களா? | | |
| 6 | ஈரல் நோயால் (சிரோசிஸ், ஈரல் கட்டிகள்) முன்பு / தற்போது பாதிக்கப்பட்டிருக்கீறீர்களா? | | |
| 7 | மார்பகத்தில் கட்டிகள் அல்லது வேறு பிரச்சனைகளால் முன்பு / தற்போது பாதிக்கப்பட்டிருக்கீறீர்களா? | | |
| 8 | உங்களைப் பொறுத்தவரையில் வழமைக்கு மாறான யோனிவழிக் குருதிப் போக்கினால் பாதிக்கப்பட்டிருக்கிறீர்களா? | | |

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளுக்கு ஆம் என்று பதிலளிப்பின், அந்தப் பெண்ணை வேறோர் குடும்பத்திட்டமுறையைப் பாவிக்கும்படி அறிவுரை வழங்க வேண்டும். அல்லது கைவசமுள்ள மருத்துவ அறிக்கைகளுடன் அவரை மருத்துவ உத்தியோகத்திரிடம் அனுப்பி வைக்க வேண்டும்.

**வைத்திய உத்தியோகத்தருக்கான அறிவுறுத்தல்:**
குறிப்பிட்ட பெண் DMPA ஐப் பாவிக்கத் தகுதியுடையவரா என்பதை அறியவும் (2009 ல் உலக சுகாதார ஸ்தாபனத்தால் வடிவமைக்கப்பட்டு இலங்கைப் பெண்களுக்கு ஏற்றபடி மாற்றியமைக்கப்பட்ட கர்ப்பத்தடை முறைகளைப் பாவிப்பதற்குரிய தகுதிகாண் அட்டையைப் பயன்படுத்தவும்.) அல்லது வேறொரு குடும்பத் திட்டமிடல் முறையைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தவும்.

## 14. தொடர்ச்சியான கவனிப்புக்கள்.

DMPA உபயோகிக்கும் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் / சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்தி செய்தல், அவர்களைத் தொடர்ந்து DMPA ஊசியைப் பெற்றுக் கொள்ள ஊக்குவித்தல் ஆகியன தொடர்ச்சியான கவனிப்புகளின் நோக்கமாகும்.

### 14.1. வெளிக்களத்தில்

- DMPA ஊசியை முதல் தடவை வழங்கிய பின்னர் அடுத்துவரும் 3 மாதங்களுக்கு குடும்ப நல உத்தியோகத்தர் அப்பெண்ணின் வீட்டுக்கு மாதாந்தம் தொடர் தரிசிப்புக்காகச் செல்ல வேண்டும். பின்னர் 3 மாதங்களுக்கு ஒரு தடவை தொடர் வீட்டுத் தரிசிப்புக்களுக்காகச் செல்ல வேண்டும்.

- பக்கவிளைவுகள் பற்றி விசாரித்து அறிந்து அவ்விபரங்கள் குடும்பதிட்ட வெளிக்கள அறிக்கையிலும் (H-1154) குடும்பத் திட்ட பாவனையாளர் அறிக்கையிலும் (H-1155) பதிவு செய்யப்பட வேண்டும்.

### 14.2. பிணியாய்வு நிலையத்தில்.

- DMPA ஊசியைத் தொடர்ந்து பெறும் பெண்கள் ஏதாவது ஆபத்துக் காரணிகளை கொண்டுள்ளனரா என்பதை அறிய வருடாந்தம் மருத்துவ பரிசோதனைக்குட்பட வேண்டும்.
- DMPA ஊசியைப் பெற பிணியாய்வு நிலையத்திற்கு வரும் பெண்ணிடம் பக்கவிளைவுகள் ஏதேனும் ஏற்பட்டதா என்பது பற்றி வினாவ வேண்டும்.
- ஏதாவது பிரச்சனைகள், சிக்கல்கள் ஏற்பட்டிருப்பின் குடும்பத்திட்ட பிணியாய்வு நிலைய அறிக்கையிலும், (H-1153) குடும்பக் கட்டுப்பாட்டு முறை பயனளிக்காமை, அவற்றால் ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் தரங்குறைந்த தயாரிப்புக்களுக்கான மீள் அறிக்கையிலும் பதியப்படுதல் வேண்டும். பகுதி 10.1 ல் கூறப்பட்டவாறு பக்கவிளைவுகள் கையாளப்பட வேண்டும்.

## 15. சேவை வழங்கல்.

### 15.1. சேவை வழங்குபவர்கள்.

- மருத்துவ உத்தியோகத்தர்கள் (விசேட மகப்பேற்று மற்றும் பெண்ணோயியல் நிபுணர், சுகாதார வைத்திய அதிகாரி).
- பதிவு செய்த மருத்துவ உத்தியோகத்தர் (RMO)
- பொது சுகாதார தாதி உத்தியோகத்தர் (PHNS)
- மேற்பார்வை குடும்பநல உத்தியோகத்தர் (SPHM)
- குடும்ப நல உத்தியோகத்தர் (PHM)

### 15.2. DMPA ஊசி கிடைக்கும் இடங்கள்

- அரசாங்க குடும்பதிட்ட பிணியாய்வு நிலையங்கள் (வைத்தியசாலை, சு.வை.அ.காரியாலயம் மற்றும் வெளிக்கள சேவை)
- மலையகத் தோட்டப்பகுதி குடும்பதிட்ட பிணியாய்வு நிலையங்கள்.
- அரச சார்பற்ற நிறுவனங்களால் நடாத்தப்படும் குடும்பத்திட்ட பிணியாய்வு நிலையங்கள் (உ+ம் : FPA, PSL, SLAVSC)
- தனியார் வைத்தியசாலைகள் மற்றும் தனியார் மருத்துவ நிலையங்கள்.

DMPA ஊசியானது அரசாங்க மற்றும் மலையக தோட்ட குடும்பத் திட்ட பிணியாய்வு நிலையங்களிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

### 15.3. களஞ்சியப்படுத்தல்.

- DMPA மருந்துக் குப்பிகள் அறை வெப்பநிலையில் (15-30$^{0}$C) குளிர்மையான, ஈரலிப்பற்ற சூரிய ஒளி நேரடியாகப் படாத இடத்தில் செங்குத்தாக நேராக பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும்.
- DMPA அதிகுளிர்சாதனப் பெட்டியினுள் வைக்கப்படக் கூடாது.

## 16. DMPA பயனளிக்காமல் போகக் கூடிய சந்தர்ப்பங்கள்.

- கீழ்வரும் சந்தர்ப்பங்களில் DMPA ஊசி பயனளிக்காமல் கர்ப்பந்தரிக்க நேரிடலாம்.
- அடுத்து வரும் DMPA ஊசியை எடுக்க பிந்தியமை (குறிப்பிட்ட திகதியில் பிணியாய்வு நிலையத்திற்கு சமூகமளிக்காமை, மருந்து கையிருப்பின்மை போன்றவை)
- DMPA ஊசி சரியான அளவில் வழங்கப்படாமை (1 மி.லீ ஐ விட குறைவாக வழங்கப்படல்) குறைந்த தராதரமான DMPA ஊசி வழங்கப்பட்டமை (மிகக் குறைந்த அல்லது மிகக் கூடிய வெப்பநிலையில் வைக்கப்பட்டிருந்த DMPA குப்பிகள்)

மேற்குறிப்பிட்ட சகல சந்தர்ப்பங்களும் தவிர்க்கப்படக் கூடியவை.